DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.136/2025**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மனோகரன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | குருசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026.

1 , 2, மற்றும் 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் மேட்டுத்திருக்காம்புலியுரில் குடியிருந்து திருக்காம்புலியூரில் மளிகைக்கடை வைத்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம்-91 உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (படிவம்-91 உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரிகளைத் தெரியும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். 23.09.2023 ம் தேதி திருக்காம்புலியூர் பஸ்ஸ்டாப்புக்கு காலை 10.00 மணிக்கு வந்தாக்ள். மேப் போட்டார்கள் கையெழுத்து கேட்டார்கள். நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னுடன் வேறு யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 14.09.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் மாயனூர் போலிசார் செல்லாண்டியம்மன் கோவில் அருகே உள்ள ஆற்றங்கரை அருகே கவிதாசையும், திவாகரையும் கைது செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்பு கவிதாஸ் கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து போலிசாரிடம் ஒப்படைத்ததை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது கைப்பற்றுதல் மகஜர், படிவம்–91 ம் கையெழுத்துசெய்தேன் என்று தற்போது எதிரிகள் என் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

கையெழுத்துபோட்ட பேப்பரில் என்ன விவரம் இருந்தது என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.22 10:33:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.